1978 மார்ச் 16]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, அந்த முயற்சிகளை அந்தப் பள்ளி நிர்வாகத்தினரே உடனடியாக எடுக்க வேண்டும். அவர்கள் உடனடியாக எடுத்து அரசுக்குத் தெரிவித்தால், தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்சினே.

சட்டமன்றப் பேரவையில் திரு. சுப்பு அவர்கள் மேலவையைப்பற்றிப் பேசியது குறித்து.

புலவர் புலமைப்பித்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினே எழுப்ப விரும்புகிறேன். இன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள், இந்த அவை * * என்ற வகையில் பேசியதாகத் தெரிகிறது. This is a mother chamber என்றுதான் நான் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர, * * என்று நான் கேள்விப்படவில்லே. இந்த அவையினுடைய சிறப்பை, கவுரவத்தைக் குறைக்கின்ற வகையில் இப்படிப் பேசியது சரிதானு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அப்படிப் பேசியது உண்மை. உடனடியாக அதைப்பற்றிப் பிரச்சினை எழுந்தது. சபாநாயகர் அவர்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிருர்கள். இன்றைக்கு இந்தப் பிரச்சினையை இங்கே கிளப்ப வேண்டிய அவசியமில்லே என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினையில், பேரவையின் அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொல்லி தலைவரே அந்த வார்த்தையைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டதால், அதைப் பற்றிப் பிரச்சினே யில்லே என்று நினைக்கின்றேன். இன்னென்று இங்கு எடுத்துச் சொல்கிறேன். யார் என்ன சொன்னுலும், இரண்டு அவையும் சம அந்தஸ்து உள்ளவைதான். இன்னென்று இந்த அவைதான் முன்பிருந்து இருப்பதாலும், அதில் வயது

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

வந்தவர்கள் இருப்பதாலும், இது தாய், அது சேய் என்பதல்ல. தயவுசெய்து அங்கத்தினர்கள் அப்படிக் கருத வேண்டாம். இரண்டுமே சம அந்தஸ்து உடையவைகள்தான். இன்னொருவர் மதிப்புக் கொடுத்துதான் மதிப்புவர வேண்டும் என்பதில்லை. அந்த மாதிரியான வகையிலே பேச வேண்டாம். அந்த வார்த்தைகள் குறிப்பிலே இருக்க வேண்டியதில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இங்கு அந்தப் பிரச்சினை எழுந்ததால், அந்த வார்த்தைகள் இந்த அவையின் குறிப்பிலே மறுபடியும் ஏறுகின்றன. இந்த விவாதத்தை நீக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நீக்க வேண்டியதைத்தான் நீக்க வேண்டும். இந்த * * என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகளை நீக்குவதிலே ஆட்சேபணை இல்லை. மாறுபட்ட கருத்துக்களைத்தான் நீக்க வேண்டுமே தவிர, எல்லாவற்றையுமே நீக்க வேண்டும் என்பது அல்ல. நான் சொல்வது, எல்லாவற்றையும் இங்கே நீக்குவது நல்லதாக இருக்காது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, * * என்ற வார்த்தைகளை மட்டும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

4. அரசின் தீர்மானம்.

தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்—தொடர்ச்சி.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHY : Mr. Deputy Chairman, this being my maiden speech, I am rather hesitant to stand before such an august gathering. However, I have taken refuge under the revered memory that the greatest legislator in the world, Mr. Abraham Lincoln, had his own reservations when he made his maiden speech. However, if I am able to deliver the goods, I would attribute it to the inspiration I have drawn from this august gathering. But, if there are deficiencies, I would request you to regard it as a human failure.

Sir, I have gone through this Report which I regard as a text-book for educationists. Yesterday's speeches made by the hon. Members have inspired me to give a very thoughtful thinking over this text-book on education.

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.